DEPOSITION OF WITNESS

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

MCOP No.24/2024

எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சி வாக்குமூலம்

| | |
|---|---|
| Name | ஜெயகிருஷ்ணன் |
| Father's Name | த/பெ.பொன்னுமுத்து |
| Village | தூத்துக்குடி |
| Taluk | |
| Religion | |
| Age | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.04.2026.

**எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை:-**

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் எனக்கு சாட்சியம் அளிக்க அதிகாரம் அளித்துள்ளார் அந்த அதிகார கடிதம் ச.சா.ஆ 1. அழைப்பாணையில் கோரியுள்ள ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். TN 72 Q0689 என்ற நான்கு சக்கர வாகனத்திற்கு விபத்து தேதியான 10.04.2022 அன்று அனுமதி சான்று மற்றும் தகுதிச்சான்று இல்லை. அதை காட்டுவதற்காக எங்கள் அலுவலக கணினியில் இருந்து எடுக்கப்பட்ட Vehicle History Details மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறிக்கை ச.சா.ஆ 2 வரிசை. மேற்படி வாகனத்தின் தகுதிச்சான்று 31.07.2014 அன்று முடிவடைந்துவிட்டது. அதன்பின்பு அதை புதுப்பிக்கப்படவில்லை. மேற்படி வாகனத்தின் அனுமதிச்சான்று

30.03.2016 உடன் முடிவடைந்துள்ளது அதையும் திரும்ப புதுப்பிக்கவில்லை. பொதுவாக தகுதிச்சான்றோ, அனுமதிச்சான்றோ இல்லாமல் வாகனத்தை பொதுப்பாதைகளில் இயக்குவது மோட்டார் வாகனச்சட்டத்திற்கு விரோதமானது.

<u>**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

1. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளாரா என்ற விபரம் துலங்காது. தகுதிச்சான்று என்பது வாகனம் இயக்குவதற்கு தகுதியானதா என்பதற்கான சான்றிதழ். அதில் இயந்திரக்கோளாறு இருந்தால் அதுபற்றி குறிப்பிட்டிருப்போமா என்றால் பொதுச்சாலையில் இயக்குவதற்கு தகுதியானதா என்று சான்றளிப்போம். மேறப்படி வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளார் (ம.சா.ஆ 4) என்றும் அதில் 15 வது காலத்தில் வாகனம் நல்ல நிலையில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் டயரின் நிலை பற்றியும் 16 வது காலத்தில் விபத்து இயந்திரக்கோளாரினால் ஏற்படவில்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது. LMV என்பது இலகுரக வாகனங்களை இயக்குவதற்கான உரிமமாகும். இலகு ரக வாகனம் சொந்த உபயோகத்திற்கானதாக இருந்தால் LMV. வாடகை வாகனமாக இருந்தால் Batch உரிமம் வழங்கப்படும். விபத்தின்போது 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிய தகுதியுடன் தான் வாகனத்தை இயக்கினார் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> **– இல்லை.**

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**